பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 05 2024 **SUNDAY** 7 15 **PM**

தலைப்புச் செய்திகள்

1. 2047 ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க பிஜேபி உறுதியான நடவடிக்கைகள் எடுக்கும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

2. கடந்த மக்களவைத் தேர்தலில் அளித்த வாக்குறுதிகளை பிஜேபி இன்னும் நிறைவேற்றவில்லை என்று காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, குற்றம் சாட்டியுள்ளார்.

3. இந்திய ஜனநாயகத்தின் தேர்தல் செயல்பாடுகள் குறித்து, 23 நாடுகளைக் சேர்ந்த பன்னாட்டு தூதுக்குழுவினரிடம் தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்குமார் இன்று எடுத்துரைத்தார்.

4. நறுமண மற்றும் மசாலா உணவுப்பொருள் உற்பத்தியில் அதிக அளவு பூச்சிக் கொல்லிகள் அனுமதிக்கப்படுவதாக வெளியான தகவலை மத்திய வேளாண் அமைச்சகம் மறுத்துள்ளது.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி 28 ரன் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வென்றது.

>>>><<<<

மக்களவைத் தேர்தலில் 3வது கட்ட வாக்குப்பதிவு வரும் செவ்வாய்க்கிழமை, 10 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 93 தொகுதிகளில் நடைபெறவுள்ளது.

இதனையடுத்து, இந்த தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் இன்று முடிவடைந்தது.

மூன்றாம் கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் நிறைவடைவதை ஒட்டி, அரசியல் கட்சி தலைவர்களும், வேட்பாளர்களும் இறுதிகட்டமாக தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இந்த தொகுதிகளில் இன்று மாலை தொடங்கி, நாளை மறுநாள் வாக்குப்பதிவு முடியும் வரை, தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடக்கூடாது என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

ஊடகங்கள், குறிப்பாக - சமூக ஊடகங்கள் மூலமாக பரப்புரை மேற்கொள்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பதற்றம் எழக்கூடிய தொகுதிகளில் பாதுகாப்பு அணிவகுப்பு நடத்தப்பட்டு, கூடுதல் பாதுகாப்பிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

>>>><<<<

மக்களவை தேர்தலில் நான்காவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 96 தொகுதிகளில் அரசியல் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆந்திரப்பிரதேசத்தில் 25 தொகுதிகளிலும், தெலங்கானாவில் 17, உத்தரபிரதேசத்தில் 13, மகாராஷ்ட்ராவில் 11, மேற்கு வங்கம் மற்றும் மத்தியப்பிரதேசத்தில் தலா 8, பீகாரில் 5, ஜார்கண்ட் மற்றும்

ஒடிசாவில் தலா 4 தொகுதிகளிலும் மற்றும் ஜம்மு காஷ்மீரில் ஒரு தொகுதியிலும் நான்காவது கட்டமாக இம்மாதம் 13ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இந்நிலையில், ஆந்திரப் பிரதேச மாநிலம், ஹிந்துப்பூர் மக்களவைத் தொகுதியில் பிஜேபி மூத்த தலைவர் திரு. அமித் ஷா தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது பேசிய அவர், கடந்த பத்தாண்டுகளில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் சிறப்பான செயல்பாடுகளால் நாட்டு மக்களின் பொருளாதாரமும், வாழ்க்கை தரமும் உயர்ந்துள்ளதாக கூறினார்.

80 கோடிக்கும் மேற்பட்ட மக்கள், பிரதமரின் கரீப் கல்யாண் திட்டத்தின் கீழ், இலவச ரேசன் பொருட்களை பெற்று வருவதாகவும், 50 கோடிக்கும் மேற்பட்டோர் ஆண்டுக்கு 5 லட்சம் ரூபாய் வரை ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ், மருத்துவக் காப்பீடு பெற்று பயனடைந்து வருவதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

கோவிட் பெருந்தொற்று காலத்தில் 130 கோடி மக்களுக்கும் இலவசமாக தடுப்பூசி வழங்குவதற்கான முகாம்கள் நடத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் ஆளும் திரு. ஜெகன்மோகன் ரெட்டி தலைமையிலான அரசு, வளர்ச்சிக்கான திட்டங்கள் எதையும் மேற்கொள்ளவில்லை என்றும், முதலீடுகளை கொண்டு வரவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள திரு. சந்திரபாபு நாயுடு போன்ற தலைவர்கள் மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக சிறப்பாக செயல்பாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க பிஜேபி உறுதியான நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் திரு. அமித் ஷா குறிப்பிட்டார்.

மேற்குவங்க மாநிலம், மால்டாவில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, கடந்த மக்களவைத் தேர்தலில் பிஜேபி அளித்த வாக்குறுதிகளை இன்னும் நிறைவேற்றவில்லை என்று குற்றம் சாட்டினார்.

வெளிநாடுகளில் உள்ள கறுப்புப் பணத்தை இந்தியா கொண்டு வந்து, ஒவ்வொருவரின் கணக்கிலும் தலா 15 லட்சம் ரூபாய் வரவு வைக்கப்போவதாக அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி கூறிய வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்று கூறினார்.

விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் விலைவாசியையும், பணவீக்கத்தையும் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும், வேலைவாய்ப்பின்மை முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இளைஞர்களுக்கு 2 கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருவதாக அக்கட்சி அளித்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை என்று திரு. மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்தார்.

>>>><<<<

உலகின் மாபெரும் ஜனநாயக நாடாக திகழும் இந்தியாவின் தேர்தல் செயல்பாடுகள் குறித்து பன்னாட்டு தூதுக் குழுவினருக்கு தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்குமார் எடுத்துரைத்தார்.

இந்தியாவின் தேர்தல் நடைமுறைகளை அறிந்து கொள்வதற்காக புதுதில்லி வந்துள்ள, 23 நாடுகளைச் சேர்ந்த 75 பேர் கொண்ட பன்னாட்டு தூதுக்குழு கூட்டத்தில் உரையாற்றிய அவர், பல்வேறு பணிகளை ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகள், பாதுகாப்பு நடைமுறைகள் ஆகியவை குறித்து விளக்கினார்.

தேர்தலில் பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், அவற்றின் உண்மைத்தன்மை மற்றும் வாக்காளர்கள் யாருக்கு வாக்களித்தோம் என்பதை அறிந்து கொள்வதற்கான வி.வி.பேட் இணைப்பு ஆகியவை குறித்தும் அவர் எடுத்துரைத்தார்.

தேர்தல் நடைமுறைகளை கண்காணிக்க வாக்குச்சாவடிகளில் கேமராக்கள் பொருத்தப்படுவது குறித்தும் அவர் எடுத்துக் கூறினார்.

வாக்காளர்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு, தேர்தல் ஆணையத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளையும், பன்னாட்டு தூதுக்குழுவிடம் தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்குமார் விரிவாக எடுத்துரைத்தார்.

மக்களவை தேர்தல் நடைபெற்று வரும் நிலையில், மகாராஷ்ட்ரா, கோவா, குஜராத், கர்நாடகா, மத்தியப்பிரதேசம் மற்றும் உத்தரபிரதேச மாநிலங்களில் நடைபெறும் மக்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவை பன்னாட்டு தூதுக்குழுவினர் நேரில் பார்வையிடவுள்ளனர்.

>>>><<<<

நறுமணப் பொருட்கள் மற்றும் மசாலா உணவுப் பொருட்கள் உற்பத்தியில் அதிக அளவு பூச்சிக் கொல்லிகள் அனுமதிக்கப்படுவதாக கூறப்படும் குற்றச்சாட்டை மத்திய வேளாண் அமைச்சகம் மறுத்துள்ளது.

இதுதொடர்பாக அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், உணவுப் பாதுகாப்பு மற்றும் இந்திய தர நிர்ணய ஆணையம் - **FSSAI** சர்வதேச விதிமுறைகளுக்கு உட்பட்டு, பூச்சிக்கொல்லிகளை அனுமதித்து வருவதாக கூறப்பட்டுள்ளது.

10 மடங்கு அதிகமான அளவுக்கு பூச்சிக்கொல்லிகளை உணவுப் பாதுகாப்பு தர நிர்ணய ஆணையம் அனுமதிப்பதாக வெளியான செய்திகள் தவறானவை என்றும், அவற்றில் உண்மை இல்லை என்றும் வேளாண் அமைச்சகம் கூறியுள்ளது.

மசாலா மற்றும் நறுமணப் பொருட்களில் பயன்படுத்துவதற்கென்று 139 வகையான பூச்சிக்கொல்லிகள் சர்வதேச விதிமுறைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>><<<<

ஒடிசா மாநிலத்தில் நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் 6 வேட்பாளர்கள் கொண்ட பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

ஜாலேஸ்வர் சட்டமன்ற தொகுதியில் திரு. சுதர்சன் தாஸூம், நீல்கிரி தொகுதியில் அக்ஷயா ஆச்சார்யாவும், அட்டாகர் தொகுதியில் திரு. சுதர்ஸன் சாஹூவும் போட்டியிடுகின்றனர்.

>>>><<<<

ஜம்மு காஷ்மீரில் இந்திய விமானப்படை வாகனத்தின் மீது, தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளை தேடும் பணியினை, பாதுகாப்புப் படையினர் இரண்டாவது நாளாக மேற்கொண்டுள்ளனர்.

இந்த தாக்குதலில் விமானப்படையினர் சென்ற வாகனத்தின் மீது 30 துப்பாக்கி குண்டுகள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகளுக்கு உதவியதாக கூறப்படும் ஆறு உள்ளூர்வாசிகளிடம் பாதுகாப்புப் படையினர் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

>>>><<<<

சத்திஷ்கர் மாநிலம், தண்டேவாடா மாவட்டத்தில் 35 மாவோயிஸ்ட்டுகள், இன்று தங்களது ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு, பாதுகாப்புப்படையினரிடம் சரண் அடைந்தனர்.

சத்திஷ்கர் மாநில காவல்துறையும், மத்திய ரிசர்வ் காவல்படையினரும் இணைந்து பாதுகாப்பாக தீவிரவாதிகள் சரணடைவதற்கான திட்டத்தை அறிவித்திருந்தனர்.

இதனை ஏற்று, இவர்கள் சரணடைந்துள்ளதாக பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

சரணடைந்தவர்களில் 3 பேரை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்து தருவோருக்கு சன்மானம் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

>>>><<<<

தமிழகத்தில் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் நாளை காலை வெளியாகவுள்ளன.

மாணவர்கள் மற்றும் தனித்தேர்வர்களுக்கு அவர்கள் பதிவு செய்த கைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி வழியாக தகவல் அனுப்பப்படும். மேலும், **www.tnresults.nic.in, www.dge.tn.gov.in** என்ற இணையதளம் வாயிலாகவும் முடிவுகளை அறிந்து கொள்ளலாம்.

இந்த தேர்வை 7 லட்சத்து 50 ஆயிரம் பேர் எழுதியுள்ளனர்.

>>>><<<<

நாட்டின் கிழக்கு மற்றும் தெற்கு தீபகற்ப பகுதியில், நாளையும் வெப்ப அலை வீசும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், தெலங்கானா, ராயலசீமா, ஒடிசா மற்றும் பீகார் மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில் வெப்பத்தின் தாக்கம் அதிகமாக காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, ராயலசீமா, தெலங்கானா உள்ளிட்ட பகுதிகளில் நாளை வரையும், கர்நாடக மாநிலத்தின் உட்பகுதிகளில் நாளை மறுநாள் வரையும் வெப்ப அலையின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, தமிழகத்தின் பல இடங்களில் இன்று 100 டிகிரிக்கும் கூடுதலாக வெப்பம் பதிவாகியுள்ளது.

வெப்ப அலையின் தாக்கமும் அதிகரித்து காணப்பட்டது,

நாளையும், தமிழகத்தில் வெப்பஅலையின் தாக்கம் அதிகமாக இருக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையத்தின் இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

>>>><<<<

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி 28 ரன் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வென்றது.

தரம்சாலாவில் சற்றுமுன் நிறைவடைந்த இப்போட்டியில் முதலில் பேட் செய்த சென்னை அணி 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 167 ரன் எடுத்தது.

168 ரன் என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 139 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

>>>>END<<<<